# புலம்பெயர் தமிழர்களின் பரம்பலும் இலங்கையின் வெளிநாட்டு பண வருவாய்களும் : வடக்கு - கிழக்கு பற்றிய சிறப்பு பார்வை

வி . பி. சிவநாதன் ; ச. சுரேஜினி

**ஆய்வுச் சுருக்கம்**

உலக மயமாக்கத்தின் பல விளைவுகளில் ஒன்று நாடுகளுக்கு இடையில் மூலதனம் மட்டுமன்றி ஊழியமும் குறிப்பிடக்கூடிய அளவில் இடம்பெயர்ந்து அன்னிய செலவணியை தாய்நாட்டிற்கு ஈட்டிக்கொடுக்கின்றது. இந்த வகையில் இக்கட்டுரையானது இலங்கையின் மனிதவளம் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் ஈட்டுகின்ற அன்னியச் செலவாணியை எடுத்துக் கூறுகின்றது. இந்த ஆய்வுப்பரப்பில் இலங்கை தொடர்பாக பலர் ஆய்வுகளை செய்தபோதும், வடக்கு - கிழக்கு மக்களை குறிப்பாக தமிழர்களை மையப்படுத்திச் செய்யப்பட்ட ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. வெளிநாட்டு பண அனுப்புதல்கள் இலங்கையின் வெளிநாட்டு வருவாயில் முதல் நிலைகளில் பிரதான வகிபாகத்தைக் கொண்டுள்ளது. இச்சம்பாத்தியத்தில் இலங்கையின் புலம்பெயர் தமிழ் மக்கள் ஈட்டுகின்ற அன்னிய செலவாணி அதிகமாக காணப்படுகின்றது. ஏறத்தாழ இரண்டு மில்லியன் இலங்கையர்கள் இதில் ஒரு மில்லியன் இலங்கைத் தமிழர்கள் வெளிநாடுகளில் வாழ்வதாக மதிக்கப்படுகின்றது. இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதற்கு பணம் சம்பாதித்தல், உள்நாட்டு இன முரண்பாடுகள் மற்றும் யுத்தம், கல்வி, தொழில் எதிர்பார்க்கைகள், சாதிவேறுபாடுகள், சமுதாய ஒடுக்க முறைகள், வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டதால் ஏற்பட்ட வறுமை, கல்வியில் தரப்படுத்தல் மற்றும் கோட்டா முறைமை வேலையற்ற நிலை, மீன்பிடி பாதிக்கப்பட்ட மை, வாழ்விடங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்டமை, குடிமனைகள் அழிக்கப்பட்ட மை, அச்சுறுத்தல்கள், பாதுகாப்பின்மை மற்றும் குடியேற்ற பின்னணிகள் போன்றன கார ணமாக அமைந்துள்ளன. இவர்கள் தமது வீடுகளுக்கு அனுப்பும் நிதியானது நாட்டின் மொத்த தேசிய வருமானத்தில் சராசரியாக ஏழு வீதம் என்பதோடு இது நாட்டின் தொடர்ச்சியான நிலை யான வருமான அதிகரிப்பாகவும் ஏனைய வெளிநாட்டு வருமான மூலங்களைவிட அதிகமாக வும் காணப்படுகின்றது. இது பொருளாதார வளர்ச்சிக்கு உள்ளது. வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் அதிகளில்வ கனடாவில் வாழ்கின்றனர். வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் வருவாயை வீடுகட்டுதல், சீதனம் கொடுத்தல், தங்கநகை செய்தல், காணி கட்டிடங்களை வாங்குதல், மோட்டார் சைக்கில்கள் வாங்குதல், விலையுயர்ந்த தொலைபேசிகள் வாங்குதல், கோயில்களுக்கு செலவு செய்தல், வீட்டின் பங்களிப்பதாகவும் நன்மை தீமைகளுக்கு செலவு செய்தல், சிறு தொழில் முயற்சிகளை ஆரம்பித்தல் மற்றும் வங்கிகளில் நிலையான வைப்புக்களில் இடுதல் போன்ற நுகர்வு செலவுகளையும் முதலீட்டு செலவுகளையும் செய்கின்றார்கள். இலங்கைத் தமிழர்களுக்கு யுத்தம் ஏற்படுத்திய இந்த நிதியியல் பலத்தை பொருளாதார திட்டமிடலாளர்கள் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும்.

**திறவுச் சொற்கள் :** வெளிநாட்டு பண வருவாய்கள், புலம்பெயர் தமிழர்கள், புலம்பெயர் இலங்கையர்கள், புலம்பெயர் குடிப்பரம்பல்

## 1. அறிமுகம்

இலங்கையிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் ஏராளமானவர்கள் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்வதும் நிரந்தரமாக குடி பெயர்ந்து செல்வதம் இன்று ஒரு சாதாரண காட்சி யாக உள்ளது. இதனால் மூளைசாலிகள் வெளியேற்றம் ( Brain Drain ) என்று சொல்லக் கூடிய அளவிற்கு வளரும் நாடுகளின் சிறந்த மனித வளங்களும் குடி பெயர்ந்து சென்று கொண்டிருக்கின் றன. மனிதர்கள் நாடு விட்டு நாடு செல்வதன் நோக்கம் அவர்கள் இருக்கின்ற நிலைமையை விட மேன்மையான நிலை ஒன்றை அடையலாம் என்ற எண்ணமாகும். வெளிநாட்டிற்குச் சென்றவர்கள் அங்கு

நன்றாக முன்னேறி வாழ்கிறார்கள் எனின் அது அவர்களின தாய் நாட்டு வளர்ச்சி அல்ல, தாய் நாட்டு மக்களின் முன்னேற்றமும் அல்ல அது அவர்கள் வசிக்கும் நாட்டின் வளர்ச்சியினால் ஏற்பட்ட விளைவு ஆகும். வெளிநாட்டில் வசிப்பவர் பணத்தை தாய் நாட்டிற்கு அனுப்பினால் அல்லது தாய் நாட்டில் முதலிட்டாலேயே சொந்த நாட்டுப் பொருளாதாரம் வளர்ச்சி அடைகிறது. இவ் ஆய்வு கட்டுரையானது உலகத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பரம் பலை எடுத்து வருவதோடு இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு வருவாய்களை எடுத்துக் காட்டுகின்றது.

## 2. புலம்பெயர் பின்னணிகள்

" திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" என்னும் முதுமொழிக்கமைய உலகெல் லாம் பரந்து வாழும் வடகிழக்கு குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர் வாழ்க்கை மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. அதாவது வெளிநாட் டிற்குச் சென்று பணிபுரி தல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீண்ட பாரம்பரியம் கொண் டது. இது 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே தோன்றியி ருந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்பட்ட மிகையான மனிதவளம் மற்றும் தமது கல்வியை பொருளாதார மேம்பாட்டிற்கான ஒரு கருவியாகத் தொடர்ந்து கையாள வேண்டியிரு ந்ததன் காரணமாக இவர்கள் தமது கல்வி மற்றும் தொழில் எதிர்பார்க்கைகளை பூர்த்தி செய்வதற்கு இலங்கைத் தீவிற்கு அப்பாலும் தற்காலிகமாக செல்ல வேண்டியிருந்த ( Cheran, 2003) அதேவேளை ஆங்கிலேயர் களாலம் இலங்கைத் தளமிழர்களில் யாழ்ப்பாணத் தமிழர்களே வெளிநாடுகளில் குடியேற்றப்பட்டனர். இந்த வகையில் வண்ணார் பண்ணை, சுழிபுரம், வட்டுக் கோட்டை, வயாவிளான், புலோலி போன்ற பிரதேசங்களிலிருந்து பெருமளவான யாழ்ப்பாணத்தவர்கள் பொருளாதாரக் காரணி களின்பின்னணியில்பிரித்தானியகாலனித்துவ ஆட்சியின் கீழான மலாயா, சிங்கப்பூர் மற்றும் இந்தியாவிற்குச் சென்று ஆரம்பத்தில் தபால், கச்சேரி, கல்வி, போக்குவரத்து மற்றும் மருத்துவம் போன்ற அரசாங்க சேவைகளில இடைநிலை ஊழியர்களாகப் ( எழுதுனர்களாக ) பணியாற்றத் தொடங்கியதிலிருந்து இன்றுவரை வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் வசிப்பவர்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பும் பணம் இங்குள்ள மக்கள் வருவாயில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் முப்பது வருடங்களுக்கு மேலான முரண்பாட்டுச் சூழல் மற்றும் யுத்தம் பல அழிவுகளை வடபகுதியில் ஏற்படுத்தியிருந்தபோதும் அது சில அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக இனப்பிரச்சனை காரணமாக இங்கிருந்த தமிழ் சிறுபான்மை மக்கள் வேலைக்காகவும் அகதிகளாகவும்தங்களைமுன்னேற்றுவதற்கான வசதிவாய்ப்புகளுக்காகவும் உலகின் பல பாகங்களுக்கும் அதிகளவில் சென்றனர். இவ்வாறு வெளிநாடுகளில் குடியேறியவர்கள் தாய்நாட்டுக்கு (வடக்கு கிழக்குக்கு) அனுப்புட் பணம் இப்பிரதேச மக்களின் வாழ்க்கைதர நிர்ணயத்தில் பிரதான பங்கினை வகிக்கின்றது.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதி மக்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணியாளர்களாக அதிகம் செல்ல, வடக்கு கிழக்கு மக்கள் இவ்வாறல்லாது வளர்ந்த நாடுகளில் அதிகளவில் தஞ்சம் மற்றும் குடியுரிமை எனவும் மத்திய கிழக்கு உட்பட ஏனைய நாடுகளில் குறைந்தளவிலும் என வளர்ந்த உலகின் நிரந்தர அங்கமாகும் போக்கு காணப்பட்டது.

## 3. இலங்கைத் தமிழர்களின் வெளிநாட்டுப் புலம்பெயர்வுக்கான காரணிகள்

வெளிநாடுகள் நோக்கிய புலம்பெயர்வுக்கு பொருள் தேடல், அரசியல் சிக்கல்கள் அரசியல் முரண்பாடுகள், இன முரண்பாடுகள் மற்றும் யுத்தம் என்பன அடிப்படையாக அமைந்தன. அதாவது இது வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டதால் ஏற்பட்ட வறுமை, கல்வியில் தரப்படுத்தல் மற்றும் கோட்டா முறைமை, வேலையற்ற நிலை, மீன்பிடி பாதிக் கப்பட்டமை, வாழ்விடங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்டமை, குடிமனைகள் அழிக்கப்பட்டமை, அச்சுறுத்தல்கள், பாதுகாப்பின்மை மற்றும் சமூகப் பிரிவினைகள் (சாதி அடையாளம்) என்பவற்றால் இப் புலப்பெயர்வு நிகழ்ந்தது. அதேநரத்தில் விடுதலை இயக்கங்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளானார்கள், வடபகுதி மத்திய வர்க்கத்திற் குள் வெளிநாட்டுக் கனவுடன் இருந்தவர்கள் மற்றும் வெளிநாடு ஒரு பணம் காய்க்கும் மரம் எனத் தெரிந்து பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டுமென்று எண்ணியவர்களும் நாட்டு நிலைமையை சாதகமாக்கிக் கொண்டு ஐரோப்பிய மற்றும் ஏனைய நாடுகளுக்குச் சென்றனர். வெளிநாடு செல்வதற்கான காரணமும்நியாயப்படுத்தலும்வாய்ப்புக்களும் யாழ்ப்பாண மக்களுக்கு மிக அதிகமாயிருந்தன.

*1983 கலவரத்திற்குப் பின்னர் ஏறத் தாழ 7000, 000 க்கம் மேற்பட்ட மக்கள்* புலம்பெயர்ந்திருக்கலாம் என்று கணிப்பிடப் படுகின்றது. இவர்கள் பெரு;மபான்மையினர் இந்தியா, ஐரோப்பா, மற்றும் கனடா ஆகிய இடங்களில் வசிக்கிறார்கள். ( Cheran, 2003, Fuglerut, 1999). *1980-1990 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 256, 307 இலங்கைத் தமிழர்கள்* ஐரோப்பாவில் புகலிடக் கோரிக்கைக்கு விண்ணப்பித்திருந்ததோடு, இவர்கள் புகலிடம் தேடும் முதல் பத்து குழுக்களில் ஒன்றாகக் காணப்பட்டனர் ( UNHCR, 2001). இலங்கைத் தமிழரில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினர் இலங்கையைவிட்டு வெளியேறி அதாவது *800, 000 க்கு மேற்பட்டவர்கள் பிற நாடுகளில்* வாழ்கின்றனர். அனைத்துலகமெங்கும் வசிக்கும் இலங்கைத் தமிழர்களில் *65 %* கும் அதிகமானவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள். இலங்கைத் தமிழர் சனத்தொகையில் *32*ரு மானவர்கள் வெளிநாடுகளில் வசிப்பதானது உலக சராசரியின் *(3. 1%) 10* மடங்கிலும் அதிகமானதென்பதோடு இவர்களின் பொருளாதாரப் பலம் பெரியது.

## 4. வெளிநாட்டுப் பணவருவாய்கள் தொடர்பான தேசிய ஆய்வுகள்

இப்பகுதியானது வெளிநாட்டுப் பண அனுப்புதல்களின் தொடர்பாக இலங்கையில் செய்யப்பட்ட ஆய்வுகளை எடுத்து விளக்கிகின்றது. *யாழ் பபாண* மக்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மூலமான வெளிநாட்டுப் பண வருவாயை மிக அதிகமாகப் பெற்றுக் கொள்கிறார்கள் எனும் தூண்டுதல்தான் வங்கித்துறையானது அதிகளவு கிளைகளை யாழ்ப்பாணத்தில் திறப்பதை விரைபுபடுத்தியது ( W. M) *கருணாரட்ண, 2011).*

இலங்கைத் தமிழர்கள் கொண்டுள்ள கூட்டுவாழ்வு மற்றும் கடும்ப ரீதியான உதவுதல் எனும் வழக்கம் அல்லது மரபு காரணமாக வெளிநாடுகளிலிருந்து ஒரு குறிப்பிடத்தக்க பண அனுப்புதல்கள் வெளிநாடு செல்லல், மருத்துவச் செலவுகள், திருமணம் மற்றும் மரணச் செலவுகள், வீடு கட்டுதல், தொழில்லவாய்ப்புக்களின் உருவாக்கம் என்பவற்றிற்கும் மற்றும் பொதுத் தேவைகளுக்கும்அனுப்பப்பட்டுக்கொண்டிருந் தாலும் அனுப்புதல்களின் வெளிநாடு செல்லல் மற்றும் சகோதரிகளுக்கான சீதனம் என்பவை மிக முக்கியத்துவம் பெறுகின்றது (Fuglerud 1999). அனேக தமிழர்கள் வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகைப் பணத்தை சகோதரிகளின் சீதனத்திற்காக

அனுப்பியிருக்கிறார்கள். வெளிநாட்டில் வசித்தாலும் வசிக்காவிட்டாலும் சகோதரிகளுக்கு திருமணம் செய்து கொடுப்பது என்பது தமிழ் சகோதரர்களின் கடப்பாடு என்ற வகையில் அதிக பணம் அனுப்பப்படுகிறது (Tharmaliingam . S 2011; Santhirasegaram 2014). யாழ்ப்பாணத்தில் வரணிக் கிராமத்தில் செய்யப்பட்ட ஆய்வில் வெளிநாட்டில் வாழும் சகோதர சகோதரர்களின் எண்ணிக்கைக்கும் சகோதரிக்காக கொடுக்கும் சீதனத்தின் மொத்தப் பெறுமதிக்கும் இடையில் நேர்க் கணியத் தொடர்பினை எடுத்துக் காட்டுகிறார். அதிகளவான சீதனத்துடன் குடும்ப வாழ்க்கையில் புகுகின்ற பெண்கள் குடும்பத்தில் அதிக அதிகார வலுவினைக் கொண்டிருப்பதையும் சந்திரசேகரம் (2013) எடுத்துக் காட்டுகின்றது. எனவே வெளிநாட்டுப் பண அனுப்புதல்கள் யாழ்ப்பாணத்தில் பெண்களின் வலுவூட்டலுக்கும் பயன்படுகின்றது.

இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர் படையின் பெரும் பகுதியினர் மத்திய கிழக்கு நாடுகளிலேயே வாழ்ந்து வருவதோடு இவர்களின் எண்ணிக்கையானது ஏறக்குறைய *700, 000* என மதிப்பிடப்படுகின்றது. (மத்திய வங்கி அறிக்கை) இலங்கையின் இவ் அனுப்புதல்கள் தற்போது வரை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதுடன் இது *2012* இல் USS6. 1 பில்லியனாகவும் *2013* இல் USS7 பில்லியனாகவும் GDP யில் *10 %* மும் ஆகும். இது தனியொருதுறையின் மிகப் பெரிய வெளிநாட்டு வருமானப் பங்களிப்பாகும். இதை *2020* இல் USS10 பில்லியனாக அதிகரிப்பதே வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் இலக்காகும் (டிலான் பெரேரா, Daily News, 23. 08. 2013).

உலகளவான இலங்கைத் தமிழ் சனத்தொகையில் ஏறக்குறைய கால்பங்கினர் வெளிநாடுகளில் வசிக்கின்றனர் ( Kuo, 1995, Noh et al, 2008). கனடாவில் *1983* இல் *150* இலும் குறைவாக இருந்த இலங்கைத் தமிழர் *1991* இல் மிகப்பெரிய சிறுபான்மைக் குழுவாக ரொரன்றோவுக்குள் காணப்பட்டனர் (Mason et al. 2008). இது *1990* இல் விண்ணப்பித்தவர்களில் *80%* மானவர்களுக்கு தஞ்சமளித்ததன் காரணமாகும். இன்று இலங்கைக்கு அடுத்து இலங்கைத் தமிழர்கள் பெருமளவில் வாழும் பகுதியாக ரொரன்றோவும் அடுத்து இந்தியாவும் உள்ளது (Beiser et al, 2003).

36 நாடுகளில் மேற்கொண்ட ஆய்வில் இப்பண அனுப்புதல்கள் பொருளாதார வளர்ச்சி மீது சிறிய தாக்கத்தைக் கொண்டிருப்பதும் ( Pradham et al, 2008), இவை நுகர்வு மீது செலவு செய்யப்படுவதால் குறுங்காலத்தில் மொத்தக் கேள்வியைத் தூண்டுவதாகவும் இது முதலீடு, வேலைவாய்ப்பை அதிகரிப்பதில்லை என்பதோடு பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யாது என Rahman at el, (2006) குறிப்பிடுகின்றார். RalÇ Chami at el, *(2003)* இல் *113* நாடுகளில் மேற்கொண்ட ஆய்வில் வெளிநாட்டு பண அனுப்புதல்கள் பொருளாதார வளர்ச்சி மீது எதிர்க்கணியத் தாக்கத்தைக் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. அதாவது குறைந்த ஊழியத்தில் வளமான மனிதவளம் இடம் பெயர்வதால் ஏற்படும் நன்மையைக் காட்டிலும் மனிதவள இழப்பால் ஏற்படும் வெளியீட்டு இழப்பு அதிகமாகும் எனப்படுகிறது.

**5. வெளிநாட்டுப் பணவருவாய் தொடர்பான பிரதேச ஆய்வுகள்**

இப்பகுதியானது வெளிநாட்டுப் பண அனுப்புதல்களின் தொடர்பாக இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் செய்யப்பட்ட ஆய்வுகளை எடுத்து விளக்குகின்றது. வி. நித்தியானந்தம், ( *2003* ) கருத்துப்படி ஈழத்தமிழர் சமூகம் தமது சீவனோபாயம் என்ற வகையில் வேலைவாய்ப்புக்களை முக்கியமாக அரசதுறையில் எதிர்பார்த்திருந்தவிடத்து

அது இவர்கள் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் விரிவடைந்து கொண்டு செல்ல வில்லை. மட்டுப்படுத்தப்பட்ட நிரம்பல்நெகிழ்ச்சிதான் காணப்பட்டது. இத்தருணத்தில் தான் மலாயாவிலும் சிங்கப்பூரிலும் அரசாங்கப் பணியொன்றைக் கட்டியெழுப்புவதிற் பிரித்தானியர் ஈடுபட்டிருந்தனர். ஈழத்தமிழர் இந்த வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. மலாயா, சிங்கப்பூர் மற்றும் நீரிணைக் குடியேற்றங்கள் போன்றன இலங்கைக்கு வெளியேயிருந்த பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாத்திரம் 1911ஆம் ஆண்டு ரூபா 602, 878 க்கும் 1920 ஆம் ஆண்டு ரூபா 2, 120, 000 க்கும் காசுக் கட்டளைகள் அனுப்பப்பட்டதாகவும் மதிப்பிடப்படுகின்றது ( வி. நித்தியானந்தன், 2003). காசுக் கட்டளைகளுக்குப் புறம்பாக இதர வடிவங்களில் அனுப்பப்பட்ட தொகையைச் சேர்க்கும்போது இது கணிசமான அளவு உயர்வாகவே இருந்திருக்கும் ( வி. நித்தியானந்தன், 2003). 2013 இல் உலகளவில் 89 ஆவதும் தென்கிழக்காசியாவில் இரண்டாவதும் பணக்காரரான மலேசியாவில் வசிக்கும் பெற்றோலிய தொலைத் தொடர்புத்துறைத் தொழிலதிபர் தற்பரானந்தம் ஆனந்தகிருஷ்ணன் மேற்கூறியவாறு இலங்கையிலிருந்து சென்ற தமிழ் பெற்றோருக்குப் பிறந்தவராவார்.

குடா நாட்டினர் தம் பொருளாதார வாய்ப்புக்கள் தேடி வெளிநாடுகளுக்குச் சென்றாலும் ஆரம்ப காலங்களில் பிரதான உழைப்பாளி மட்டும் செல்வதாகவும் ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் இங்கு வசித்தாலும் பண அனுப்புதஇல்கள் உறுதியாகவும் உயர்வாகவும் காணப்பட்டது. அதாவது உழைப்பில் செலவு போக மிகுதி தாய்நாட்டிற்கென்றாவது ( வி. நித்தியானந்தம், 2003: 136). ஆனால் தற்போது சில நாடுகளுக்கு ஆரம்பத்திலேயே குடும்பமாக அல்லது வெளிநாட்டில் வசிக்கம் குடும்ப அங்கத்தவர் ஏனைய அங்கத்தவர்களையும் அழைக்கும் நிலையும் காணப்படுகிறது.

ஓரளவுக்குக் குறிப்பிடத்தக்களவான பங்கு யாழ்ப்பாண மக்கள் - மற்றவர்கள் குறிப்பிடுவது போன்ற 30% வரை - வெளிநாட்டில் வசிப்பதோடு அவர்கள் வெளிநாட்டில் முறையான தொழில் மற்றும் வருமானம் அற்ற நிலையிலும் தமக்குக்கிடைக்கும் வருமானத்தில் பெரும்பகுதியைத் தம் குடும்பத்தைத் தாங்கிப் பிடிப்பதற்காக அனுப்புதலால் யாழ் நகரப் பொருளாதாரம் பெருமளவில் வெளிநாட்டுப் பண அனுப்புதல்களைச் சுற்றிச் சுழல்வதாகவே உள்ளது ( 25. 07. 2001- Asia Times- atimes.com).

பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணம், வெளிநாட்டு அனுப்புதல்களால் உருவாக்கப்பட்ட குமிழ்களால் வாழ்கிறது. அங்கு பணத்திற்குப் பஞ்சம் இல்லை என்பதோடு செலவழிப்பதற்கான வாய்ப்புக்கள் மட்டுமே உள்ளது. வெளிநாட்டில் அங்கத்தவரைக் கொண்டிருக்கும் ஒவ்வொரு குடும்பமும் மாதாந்தம் ரூ. 25, 000 - 30, 000 வரை அனுப்புதல்களைப் பெறுவதோடு ஒவ்வொரு குடும்பமும் ஒருவரை வெளிநாட்டில் வைத்திருக்க முயற்சிக்கின்றன ( Ashok Mehta, 2000).

இலங்கைப் பொருளாதாரத்தைக் கருத்திற் கொண்டு புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் பொருளாதாரத்தில் செழிப்பான நிலையில் இருப்பதனால், மீண்டும் இலங்கை திரும்பி தமது வணிக நடவடிக்கைகளைத் தொடரவும் அழைப்பு விடுவிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தில் 45% மான குடும்பங்கள் தம் தொழிலிலிருந்தான வருமானத்தை விட ஏனைய மூலங்களில் முக்கியமாக வெளிநாட்டு வருவாயில் மற்றும் நன்கொடைகள் ஒய்வூ

தியம் சமூகநலக் கொடுப்பனவுகளிலும் தங்கியிருக்கின்றனர். இந்த வீதமானது தேசிய சராசரியின் நான்கு மடங்காகும் ( ILO, 2006).

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் பாரிய எண்ணிக்கையைக் கொண்ட தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கை முதலீடுகள் மூலம் மீளக் கட்டியெழுப்ப வேண்டும். ( மகிந்த ராஜபக்ஷ, 2011). யாழ்ப்பாணத்தில் சீதனத்திற்கான திரண்ட சேமிப்பின் பிரதான வருமான மூலமாக இருப்பது குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருந்தான பண அனுப்புதல்களே. சீதனத் தொகைக்கும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருக்கும் குடும்ப உறவினர்களுக்குமான இணைவுக் குணகம் 67% ஆகும். இங்கு கொடுக்கப்படும் சீதனமானது காணிக் கொள்வனவு, வீடு கட்டல், நகைகள், வங்கி வைப்புக்கள் என முதலிட / சேமிக்கப்படுகின்றது ( செ. சந்திரசேகரம், 2013).

தற்போது யாழ்ப்பாணத்தில் 50 % மான மக்கள் வெளிநாட்டில் வாழும் உறவினர்களிடமிருந்து பண ஆதரவைப் பெறுகிறார்கள் (அகிலன் கதிர்காமர், 2010) என்பதுடன் இங்கு ஒப்பீட்டு வறுமையே காணப்படுகின்றது. அதிகமான குடும்பங்கள் வெளிநாட்டு வருவாயைப் பெறுவதால் இங்கு முழுமையான வறுமை மிகக் குறைவாக இருக்கிறது. ( மு. சர்வானந்தன், 2011) இவ்வருவாய்கள் அதிகரித்துள்ளதால் யாழ்ப்பாணத்தில் பல தனியார் பணப்பரிமாற்ற முகவர்கள் அதிகரித்துள்ளதோடு, இவர்கள் தம் சர்வதேச வலைப்பின்னல் முகவர்கள் ஊடாக சட்டத்தால் அனுமதிக்கப்படாத " உண்டியல்" என்பதன் மூலம் நாளாந்தம் யாழ்ப்பாணத்திற்குள் வரும் 40 மில்லியன் ரூபாவில் 30 மில்லியன் ரூபாவைப் பரிமாற்றுகிறார்கள் ( சுரேன் ஞானராஜ், 2003).

" உண்டியல்" என்பது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பணத்தை அனுப்ப தெற்காசியர்கள் பயன்படுத்தும் ஒருமுறை ஆகும். குறிப்பாக தமிழர்கள் தம் தாயகப் பகுதிகளுக்குப் பணம் அனுப்பும் முறையை இது சிறப்பாகக் குறிப்பிடுகிறது. இம்முறையில் பணம் வங்கிகளிலும் பார்க்க வேகமாகவும் குறைந்த செலவிலும் உரியவருக்கு அனுப்பப்படும். தமிழ் மக்கள் பெரும்பாலும் உழவையும் மீன்பிடித்தலையும் பிரதானமாகக் கொண்டாலும் தற்போது வெளிநாட்டு மக்கள் அனுப்பும் பணமும் தமிழர் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமாகின்றது.

அதிகமானவர்கள் அதாவது அரைப்பங்கினர் பண அனுப்புதல்களைப் பெறுவதாலும் ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு வகையில் வெளிநாட்டுத் தொடர்பைக் கொண்டிருப்பதாலும் யாழ்ப்பாணத்தில் பணம் தாராளமான தடைப்படாத பாய்ச்சலாகவுள்ளது. எனினும் அனேக குடும்பங்கள் தமது வெளிநாட்டு நிதிக்கு குறைந்தளவான வட்டியை வங்கிகளிலிருந்து பெறுவதனாலும் இதனை நுகர்விற்கு செலவழிப்பதனாலும் மீண்டும் தங்கி வாழ்பவர்களாகவே மாறுகின்றனர். சேமிப்பு, அடைவு மற்றும் குத்தகையால் உயர் இலாபம் கிடைப்பதன் காரணமாக புதிய வங்கிகள் யாழ்ப்பாணத்திற்குள் வந்து கொண்டிருக்கின்றன. இவ் வங்கிகள் அனுபவ மற்றவர்களின் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு கடன் வழங்குவதில் உதவுவதில்லை (The Asia Foundation 2011).

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டுப் பண வருவாயைப் பெறும் குடும்பங் களில்

விரும்பத்தகாத அளவில் தங்கி வாழ்வோர் மட்டம் உருவாகு வதோடு இவ்வருவாய் உள்ளூர்ப் பொருளா தாரத்தைச் செழுமையாக்கும் வகையில் பயன்படுத் தப்படுவதில்லை ( Michael Calavan, 2011). புதிய பாதை வலையமைப்பானது வடமா காணத்திற்கானது எனக் கூறப்பட்டாலும் இது இருமுனைக் குமான நன்மைகளை அதாவது தமிழர்களுக்கு போக்குவரத்தை சுலபமாக்கியதாகவும் தென்னிலங்கை மக்கள் தம் பொருட்களை வடக்கிற்கு அனுப்பவும் வடக்கின் பொருட்களை அது வடக்கிற்கே பற்றாக் குறையாக இருப்பினும் தென்னிலங் கைக்கு கொண்டு செல்லவும் உதவுவதால் பாதையானது சிங்களவருக்கு அதிக நன்மை யளிக்கிறதோ என்பதான ஒரு சந்தேக மனப் பாங்கு தமிழர்களிடம் உள்ளது ( Yarlpanam Today, 05.08.2014).

யுத்தமிருந்திருக்காவிடில் யாழ்ப்பாணம் சிங்கப்பூர் போல இந்திருக்கும். சேவைத்து றைசார் புலம் பெயர் மக்களை அதிகம் கொண்டுள்ளதால் ஒரு சர்வதேசத் தளமாக யாழ்ப்பாணம் வரமுடியும். இவர்கள் யாழ்ப் பாணம் மீது அக்கறை கொண்டுள் ளார்கள். ஆனால் செயல்வடிவம் தான் அதிகள வில்லை ( The Asia Foundation, 2011).

வெளிநாட்டில் வாழ்பவர்கள் தாய்நாட்டின் நிறுவனங்களுக்குத் தொழில்நுட்ப மற்றும் மனித ஆற்றல்களைத் திறந்தொழில் நிறுவனங்களினூ டாக வழங்கல், தம் ஆற்றல்களை தற்காலிகமாக தனிமுறைப்பணியாக தாய்நாட்டிற்கு வழங்கல், வேண்டப்பட்ட திறன்களோடு திரும்பி வந்து பணிபுரிதல் ஊடாகவும் உதவுகிறார்கள். உதாரணமாக ஐக்கிய இராச்சியத்திலுள்ள கானா மருத்துவர், பல் மருத்துவர் சங்கம் மாதாந்தம் 200 யூரோ அனுப்புதலே ஒரு குடும்பத்திற்கு மிக வசதியான வாழ்க்கையை கொடுக்கிறது.

ஆனால் இது இளையோரைத் தங்கி வாழ்பவ ராகவும் வேலைக்குச் செல்வதில் மிகச் சோம்பலுடையவராகவுமாக்குகிறது. இவர்கள் கல்விக்கு மிக முன்னுரிமையளிக்கிறார்கள். கல்விதான் யாழ்ப்பாணத்தின் செல்வம் (The Asia Foundation, 2011).

வடக்கு கிழக்கில் பொதுவாக இவ்வருமான வழியூடாக ஒவ்வொரு குடும்பமும் மற்ற வருடன் போட்டியிட்டு தமது மேம்பாட்டை அடைய முற்பட்டதான ஒரு உட்சுருளும் தன்மை கொண்ட பொருளாதாரப் போட்டி விரிவாக்கம் காணப்பட்டது. (வி. நித்தியானந் தம், 138). அதாவது வாழ்வாதாரம், பின்னர் குடும்ப உயர்வசதிகளில் நுகர்வு மற்றும் சேமிப்பு என்பதாகவும் பின்பு தம் சமூகம் சார்ந்த கோயில்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், என்பதாகக் காணப்படுகிறது.

இலங்கையில் உள்நாட்டுப் போரினால் பெற்றவர்களை இழந்த ஏழைத் தமிழ் மாணவர் களின் கல்வி வளர்ச்சிக்கு நிதியுதவிகளை 1989ஆம் ஆண்டு முதல் 2014 வரையான 25 வருடங்களாக அவுஸ்திரேலியா உட்பட பல வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழ் மக்களின் ஆதரவுடன் இலங்கை மாணவர் கல்வி நிதியம் வழங்கி வருகிறது. இவ்வுதவித் திட்டத்தினால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனும் பலனும் அடைந்துள்ளனர்.

வெளிநாட்டு வாழ் தமிழர்களால் வடக்கின் அபிவிருத்தி, உட்கட்டுமானம், வாழ்வாதாரம், ஊனமுற்றவர்களுக்கான உதவி எனப் பல வடிவங்களில் வழங்கப்பட்ட நிதியில் 3% நிதி கூட வடக்கிற்குப் பயன்படவில்லை என்பதோடு சேகரிக்கப்பட்ட நிதி வடக்கிற்கு வந்திருந்தால் இப்பிரதேசம் அபிவிருத்தியில் பின்தங்கியிருக்காது என்பதுடன் இன்று பாரிய அபிவிருத்தியைக் கொண்டதும் தேசிய

வருமானத்திற்கும் வேலைவாய்ப்பிற்கும் முன்னுதாரணமாக வடக்கு மிளிர்ந்திருக்கும் ( வாசுதேவன் இராசையா 12.02.2014 தினக்குரல்).

யாழ்ப்பாணத்தில் கோயில்களின் அபிவிருத்தி அதாவது மீளத் திருத்தி அமைத்துக் கொள்ளல், இடித்துக் கட்டுதல் அல்லது ஒழுங்காக உள்ள கோயில்களுக்கு திரும்பத் திரும்ப வர்ணம் அடித்து மினுக்குதல் எனும் பணிகள் பல இடங்களில் மிகத் துரித கதியில் நடைபெறுகின்றது. இதற்குத் தேவையான பணத்தின்பெரும்பகுதிமேற்கத்தையநாடுகளில் உள்ள தமிழர்களால் வழங்கப்படுகிறது. அதேநேரம் பல கிராமங்களில் பாடசாலைப் பிள்ளைகள் பாதணிகள், புத்தகப் பைகள் இல்லாது பாடசாலைக்குப் போகிறார்கள்.

## 6. இலங்கையில் வெளிநாட்டு சம்பாத்தியங்களின் போக்கு

இலங்கையைப் பொறுத்தவரை வளர்ச்சியடைந்து வரும் நாடு என்றவகையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறது என்பதோடு பிரதான வருவாயைத் தந்த பெருந்தோட்ட ஏற்றுமதி வருமானமும் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் தற்போது இலங்கையின் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மற்றும் தொழில் நோக்குக்காகவோ அல்லது பல்வேறு காரணங்களினால் இலங்கையில் இருந்து பிற நாடுகளுக்குச் சென்று அங்கே தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் நாட்டுக்கான பெறுமதியான ஏற்றுமதியாகக் கொள்ளப்படுவதோடு இவர்கள் தமது வீடுகளுக்கு அனுப்பும் நிதியானது நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தில் சராசரியாக 7% என்பதோடு இது நாட்டின் தொடர்ச்சியான நிலையான வருமான அதிகரிப்பாகவும் ஏனைய வெளிநாட்டு வருமான மூலங்களைவிட அதிகமாகவும் காணப்படுகிறது. இது பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பதாகவும் உள்ளது. இலங்கையின் பொருளாதாரம் இதில் அதிகமாகத் தங்கியுள்ளதாகவும் உள்ளது.

**இலங்கையின் ஏற்றுமதி வருமானம் மற்றும் வெளிநாட்டு பண அனுப்புதல் ஒப்பீடு 2007:2014**
**அட்டவணை 1.2**

| துறை | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|
| வெ.பண அனுப்புதல் | **276,728** | **316,118** | **382,801** | **465,372** | **569,103** | **763,980** | 806,400 |
| ஆடைத் தொழில் | **369,173** | **376,990** | **374,645** | **379,185** | **463,509** | **508,607** | **478,800** |
| உ.பயணம் | 42,571 | 37,094 | 40,133 | 65,018 | 91,926 | 132,427 | **226,800** |
| தேயிலை | 113,565 | 137,606 | 136,194 | 162,793 | 164,869 | 180,429 | **194,040** |
| வெ.நே.முதலீடு | | | | | | | **126,000** |

*Source* : Central Bank of Sri Lanka, 2013

கல்வி கற்றவர்-கற்காதவர் இ தொழில் புரிபவர்-புரியாதவர் மற்றும் ஆண்-பெண் பாலார் என சகலரும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்ததும் உள்நாட்டில் வேலையின்மைஇ வேலைவாய்ப்பின் ஊடாக போதிய வருமானத்தை உழைக்க முடியாமைஇ முரண்பாடுள்ள கல்வித்திட்டங்களால் மனிதவள முன்னேற்றத்தில் காணப்படும் சமநிலையற்ற முன்னேற்றம் மற்றும் விலைவாசி அதிகரிப்பு என்பன இலங்கையர் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கான பிரதான காரணங்களாகும். இவர்களில் பெரும்பாலானோர் மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணியாளர்களாகப் பணியாற்றுகின்றனர் என்பதோடு வெளிநாட்டு வருவாயில் இவர்களின் பங்கு 55%- 60% ஆகும். நாளாந்தம் 800பேர் வெளிநாட்டு வேலை நிமித்தம் இலங்கையைவிட்டு வெளியேறுகிறார்கள் (Dr. P.B.Jayasundera,2014). அரசாங்கமும் வெளிநாடுகளுக்கு சென்று பணிபுரிவதன் ஊடாகக் கிட்டும் வருவாயைக் கவனத்தில் கொண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவித்து பொருளாதாரத்தை மேம்படுத்தி வருகிறது. இவ்வருமானம் ஏற்றுமதியின் வீதமாக 2012, 2013களில் முறையே 48.7%, 43.9% ஆகும்.

அட்டவணை 1.3 வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்-2013

(Rs.million)

| நாடு | இலங்கையர் | இலங்கைத் தமிழர் |
|---|---|---|
| சவூதி அரேபியா | 600,000 | |
| ஐக்கிய இராச்சியம் | 500,000 | 220,000 |
| ஐக்கிய அரபு அமீரகம் | 300,000 | |
| குவைத் | 300,000 | |
| கனடா | 300,000 | 250,000 |
| இந்தியா | 200,000 | 100,000 |
| பிரான்ஸ் | 150,000 | 50,000 |
| கட்டார் | 100,000 | |
| அவுஸ்ரேலியா | 100,000 | 53,000 |
| லெபனான் | 100,000 | |
| ஜேர்மனி | 60,000 | 60, 000 |
| சுவிஸ்லாந்து | 55,000 | 50,000 |
| இத்தாலி | 50,000 | |
| தென்கொரியா | 20,000 | |
| ஜப்பான் | 20,000 | |
| நோர்வே | 13,772 | 10,000 |
| டென்மார்க் | 13,396 | 9,000 |
| நெதலாந்து | 25,000 | 20,000 |

| | | |
|---|---|---|
| இஸ்ரேல் | 7,500 | |
| நியூசிலாந்து | 7,257 | |
| சுவீடன் | 6,733 | |
| மலேசியா | | 24,436 |
| ஏனையவை | | |
| மொத்தம்(மதிப்ப-ீடப்பட்டது) | 3,000,000 | 887,000 |

மூலம்: Central Bank of Sri Lanka 2014,

இவர்கள் தாய் நாட்டிலுள்ள தம் உறவுகளுக்கான அடிப்படைத்தேவைகளுக்கும் ஆடம்பரங்களுக்கும் பெருமளவு நிதியை அனுப்பியிருக்கிறார்கள். தற்போதும் அனுப்பிக்கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் எண்ணிக்கை மற்றும் இவர்கள் அனுப்பும் பணம்இ பொருள் என்பன அதிகரித்தும் செல்கின்றன. இதனால் இவர்களின் அநேக குடும்பங்கள் செல்வம்இமதிப்புஇ சமூக அங்கீகாரம் மற்றும் அதிகாரம் என்பவற்றைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. அதாவது இங்கு வெளிநாட்டுப் பணவருவாயானது இதனைப் பெறும் குடும்பங்களுக்கும் ஏனைய குடும்பங்களுக்கும் இடையில் சமூகப் பொருளாதார நிலைகளில் பல்பரிமாணம் கொண்ட இடைவெளியினை உருவாக்கியுள்ளது. இவ்அனுப்புதல்களில் 90% உணவுஇ உடைஇ வசிப்பிடம்இ சுகாதாரம் மற்றும் கல்விக்கு செலவிடப்படுகின்றது.

அட்டவணை 1.4 **US dollars million**

| பிராந்தியம் | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மத்தியகிழக்கு | 868 | 1089 | 1234 | 1451 | 1745 | 1995 | 2474 | 3030 | 3358 | 3562 |
| ஐரோப்பிய யுனியன் | 286 | 355 | 411 | 500 | 525 | 603 | 724 | 885 | 1071 | 1160 |
| துாரகிழக்கு ஆசியா | 76 | 86 | 110 | 135 | 175 | 203 | 247 | 401 | 509 | 557 |
| ஏனைய ஐரோ-ப்பா | 129 | 135 | 143 | 135 | 128 | 148 | 177 | 232 | 275 | 308 |
| வடஅமெரிக்கா | 105 | 125 | 119 | 105 | 114 | 127 | 140 | 154 | 174 | 186 |
| தெ.கி.ஆசியா | 32 | 38 | 52 | 75 | 90 | 100 | 144 | 206 | 263 | 288 |
| அவுஸ்ரேலியா நியுசிலாந்து | 23 | 29 | 28 | 33 | 55 | 57 | 82 | 103 | 132 | 147 |
| தென் ஆசியா | 13 | 19 | 22 | 25 | 32 | 40 | 58 | 51 | 90 | 83 |
| தென் மத்திய அமெரிக்கா | 15 | 19 | 22 | 20 | 23 | 28 | 35 | 41 | 48 | 58 |
| ஏனையவை | 18 | 24 | 22 | 23 | 29 | 30 | 35 | 41 | 66 | 58 |
| மொத்தம் | 1564 | 1919 | 2161 | 2502 | 2918 | 3330 | 4116 | 5145 | 5985 | 6407 |

*Source* : Central Bank of Sri Lanka 2013

**7. யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு சம்பாத்தியங்களின் போக்கு**

இலங்கையின் வடக்கில், பெரும் பான்மையாக தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணமானது, ஐந்து மாவட்டங் களையும் 8,884.11 ச.கி.மீ பரப்பளவையும் கொண்ட வட மாகாணத்தில் 1,025.2 ச.கி.மீ அளவில் சிறியதாகவும் 583,378 என மக்கள் தொகையில் பெரியதாகவும், 15 பிரதேசச் செயலகங்கள் மற்றும் 435 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டிருப்பதோடு (புள்ளிவிபரத் திணைக்களம்,2014) முன்னர் இரண்டாவது பெரிய நகரமாகவும் பொருளாதார மையமாகவும் காணப்பட்டது. இலங்கையில் தமிழர்கள் வடக்கு, கிழக்கு, மலையகம், தென்னிலங்கை என பரந்து வாழ்ந்து வருகின்றனர் எனினும் இலங்கை மக்கள் மத்தியில் முதலாளித்துவ, அரசியல் உறவுகள் அறிமுகப்படுத்தப்பட்ட தொடக்க காலத்திலிருந்து யாழ்ப்பாண சமூகமே முழுத்தமிழ் சமூகத்தையும் பிரதிநிதித்துவம் செய்வதான ஒரு தோற்றப்பாட்டினைக் கொண்டிருந்தது (சிவத்தம்பி,1995). இதற்கு வன்னி மற்றும் கிழக்குப் பிரதேச மக்கள் விவசாயத்திலும் கடற்தொழிலிலும் தமது முழுக்கவனத்தைச் செலுத்தியிருந்த காலத்தில் கல்வியை மட்டும் நம்பியிருந்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டமாக யாழ்ப்பாணம் திகழ்ந்ததுடன் பொருளாதாரத் துறைகளில் ஏனைய தமிழ் பிரதேசங்களைவிட உயர்ந்திருந்ததும் அரசியல் தலைவர்களும்சரி விடுதலைப் போராட்டத் தலைவர்களும்சரி யாழ்ப்பாண மண்ணிலிருந்தே அறியப்பட்டதும் சில காரணங்களாகும்.

இவ்வாறு சீரும் சிறப்பும் பெற்றிருந்த யாழ்ப்பாணம் அரசியல் தந்திரோபாயங்கள், பேதப்படுத்தலுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் உள்நாட்டுப் போர் காரணமாகப் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டு உரிய வளர்ச்சியைப் பெறவில்லையென்பதோடு இம்மக்களது பொருளாதார, சமூகஇ மதக் கட்டமைப்புக்கள் சிதைவுற்றுள்ளன. போர் என்றால் முதலில் பாதிக்கக்கூடியது பொருளாதாரம் என்றவகையில் போரின் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்கள் இப்பிரதேச சமூகத்தின் கட்டமைப்பு, நிறுவனங்கள், பொருண்மிய ஆளுமை, மூலதனவாக்கம், தொழிற்திறன், தொழிற்துறை, வளங்களைக் கட்டுப்படுத்தும் உரித்தாளுமை ஆகிய பரிமாணங்களில் மிகமோசமான பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்கள் கடந்த, போரின் பின்னர் வடக்கு வளர்ச்சியடைகிறது எனக் கூறப்பட்டுவரும் மற்றும் பல் வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் வடக்குப் பிரதேசத்தில் முன்னெடுக்கப் பட்ட நிலையிலும் பொருளாதார வளர்ச்சி மீட்சி பெறவில்லை என்பதோடு இன்றும் தொழிற்துறைகுறைந்தபட்சவளர்ச்சிஇலக்குகளைக்கூட அடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வடக்கு வாழ் மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தி எதிர்பார்த்த அளவில் அதிகரிக்கவில்லை என்பதும், வடமாகாண அபிவிருத்தி தேசிய அபிவிருத்தியில் இருந்து ஓரம் கட்டப்பட்டிருக்கிறது என்பதும் இன்று பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். மூன்று தசாப்த ஆயுதப் போராட்டத்தை காரணம் காட்டி வடக்கு அபிவிருத்தி விடயங்களுக்கு ஒதுக்கியளிக்கப்பட வேண்டிய மூலவளங்கள் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு வினைத்திறனற்ற மூலவள ஒதுக்கீடுகளாக பயன்படுத்தப்பட்டதுடன் உற்பத்தி ஆற்றல் அளவுக்குக் குறைவாகவும் காணப்பட்ட வடபகுதி அபிவிருத்திமீது தற்போதும் சிறப்பான கவனம் செலுத்தப் படவில்லை.

போரின் பின்னர் அரசு பிரதான மாக உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்து வதிலேயே அதிகளவு சிரத்தை காட்டி வருகின்றது. சமூக அரசியல் பிரச்சனைகள் குறித்து அரசு உரிய கவனம் செலுத்தவில்லை. இங்கு கொள்கை நடைமுறையாக்கத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன

(மல்காந்தி விக்கிரமசிங்க, 2014). அரசினால் மேற்கொள்ளப்படும் உட்கட்டுமான அபிவிருத்தி நடவடிக்கைகள் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிசெய்யும் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால் பெருமளவில் வடபகுதியில் கட்டுமானப் பணிகளில் மட்டும் ஏற்படுத் தப்படும் அபிவிருத்தியானது எதிர்காலத்தில் முறையான பயனைத் தரும் என்பது சந்தேகமான ஒன்றாகும். முன்னெடுக்கப்படும் துரித கட்டுமான அபிவிருத்தியானது, ஏனைய போரின்பின் மீண்டெழும் நாடுகளைவிட மேலானது எனக் காண்பிக்கின்றபோதிலும், இப்பிரதேச பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் மந்தகதியிலேயே உள்ளன. காரணம் இக்கட்டுமான திட்டமிடுதல்கள் மக்கள் நலன்களுக்காக மட்டும் செயற்படுத்தப் படுவது இல்லை என்பதுதான்.

போரினால் பாதிக்கப்பட்ட ஒரு பிர தேசத்தை வேகமாக அபிவிருத்தியடையச் செய்வதற்குப் போதுமான நிதியினை இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கவில்லை என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது. அதாவது பற்றாக்குறையான வளங்களை பல்வேறு துறைகளுக்கிடையே பகிர்ந்தளிக்க வேண்டியுள்ளது. இந்தவகையில் செழுமை யான விவசாய நிலங்கள், பழங்கள், மரக் கறிவகைகள், கால்நடைகள், மீன்பிடி, பனம்பொருட் கைத்தொழில்கள், முருகைக் கற்பாறைப் படிமங்கள், கனிமங்கள், கவர்ச்சி யான கடற்கரைகள் என பல மூலவளங்களைக் கொண்டிருந்தும் தற்போதும் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வட மாகாணத்தின் பங்கு மிகக் குறைவாக அதாவது இறுதி நிலையில் உள்ளதுடன் இதனால் இலங்கையில் ஆகக் குறைந்த தலா வருமானம் பெறும் மாகாணமாக வடமாகாணம் காணப்படுகிறது. இது நாடொன்றிலுள்ளான பிரதேச வளங்கள் அனைத்தும் அந்நாட்டு அரசின் சமபாரவைக் குட்படாது ஏற்றத்தாழ்வுடைய வகையில் அதன் அக்கறைக்குட்படுமாயின் பொருளாதாரம் பிரதேசத்திற்கு பிரதேசம் மாறுபடுவதற்குரிய சாத்தியக்கூறுகள் அதிகமாகின்றன (வி. நித்தியானந்தம், 2) என்பதைக் காட்டுகின்றது.

2012ம் ஆண்டு 3,292 பில்லியன் ரூபா பெறுமதியான உள்ளூர் உற்பத்திகள் மேல் மாகாணத்தில் இடம் பெற்றிருக்க வடமாகாணத்தில் 305 பில்லியன் ரூபா பெறுமதியான உள்ளூர் உற்பத்திகளே இடம் பெற்றுள்ளது. அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 45.8 மூ பங்கினை மேல்மாகாணம் வழங்க, வடமாகாணம் 4% என பின்தங்கிய மாகாணங்களில் முதல் மாகாணமாக அதாவது இறுதி நிலையில் காணப்படுகிறது. இவ் 4% எனும் உயர் வளர்ச்சிகூட வடமாகாணத்தில் வங்கிச் சேவைகளை விரிவாக்கியவகையில் அதாவது 2012இல் 25 புதிய வங்கிக் கிளைகளை நிறுவியமை சேவைத்துறையூடாக பெரும்பங்கை வகித்தமை மற்றும் கைத் தொழில்துறையினாலேயாகும். மாகாணங்கள் 2013இல் பெற்றுக் கொண்ட தலைக்குரிய வருமானங்களின் அடிப்படையில், மேல் மாகாணம் (ரூ.430,000), தென்மாகாணம் (ரூ.241,000), வடமேல் மாகாணம் (ரூ.225,000) என முன்னிலை வகிக்கையில் வடமாகாணம் பின்தங்கிய நிலையில் (ரூ.161,000) என காணப்படுகிறது (மத்திய வங்கி 2014 ).

இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டமே தொழிற்படையில் பங்காற்றுவோர் வீதம் (37.1%) மற்றும் பால்நிலையடிப்படையில், தொழிற்படையில் பெண்களின் பங்களிப்பு (16.7%) குறைந்த மாவட்டமாக உள்ளது. அதாவது இலங்கையில் பௌதீக வளங்களை முழுமையாகப் பயன்படுத்தாது தங்கிவாழ்வோர் அதிகமாக உள்ள மாவட்டம் யாழ்ப்பாணமே.

அட்டவணை 1.5 மாகாண மொ.உ.உற்பத்திப் பங்கு (வீதம்)

| மாகாணம் | 1995 | 1997 | 1999 | 2001 | 2003 | 2005 | 2007 | 2009 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மத்திய | 11.7 | 10.5 | 9.2 | 9.4 | 9.8 | 8.5 | 9.6 | 9.8 | 9.8 | 9.8 |
| கிழக்கு | 4.6 | 5.0 | 5.0 | 5.0 | 5.5 | 4.9 | 5.2 | 5.8 | 5.7 | 6.3 |
| வடமத்திய | 63 | 4.0 | 4.1 | 3.7 | 3.9 | 4.3 | 4.0 | 4.6 | 4.6 | 4.7 |
| வடக்கு | 3.1 | 2.8 | 2.5 | 2.4 | 2.7 | 3.1 | 2.9 | 3.2 | 3.7 | 4.0 |
| வடமேல் | 9.6 | 12.1 | 10.4 | 10.7 | 9.5 | 9.0 | 9.9 | 9.6 | 10.6 | 9.6 |
| சப்பிரகமுவ | 7.7 | 7.6 | 6.4 | 6.4 | 6.1 | 6.4 | 6.4 | 6.1 | 6.2 | 6.2 |
| தென் | 9.5 | 8.8 | 9.6 | 9.7 | 9.3 | 9.0 | 10.5 | 10.5 | 11.1 | 11.5 |
| ஊவா | 7.7 | 5.0 | 4.1 | 4.6 | 4.4 | 4.5 | 4.9 | 4.5 | 4.5 | 4.5 |
| மேல் | 42.3 | 44.3 | 48.7 | 48.3 | 49.7 | 50.4 | 46.5 | 45.8 | 44.4 | 43.4 |
| இலங்கை | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |

*Source* : Central Bank of Sri Lanka 2013

*1980*கள் வரையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய *15%* பங்களிப்பினை வடகிழக்கு மாகாணங்கள் இணைந்து வழங்கியிருந்ததுடன் மேல்மாகாணத்திற்கு அடுத்தடுத்த நிலைகளில் காணப்பட்டிருந்தது. *1983*இல் வடபகுதியின் அதிஉச்ச மீன்பிடி காரணமாக நாட்டின் *40* சதவீதத்திற்கும் அதிகமான மீன் உணவுத் தேவையை வடபகுதியின் *15* சதவீத மீனவர்களே பூர்த்தி செய்தனர் என்பதும் நாட்டின் வெங்காய மற்றும் மிளகாய் பயிர்ச்செய்கைப் பரப்பில் முறையே 55.5, 22.1சதவீதத்தை கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது (குடிசனஇ புள்ளிவிபரவியல் திணைக்களம் 1983).

*1983*க்கு முன்னர் அரிசி, காய்கறி, வெங்காயம், உருளைக்கிழங்கு, மாம்பழம், புகையிலை என்பவற்றில் யாழ்ப்பாணம் கொண்டிருந்த செழிப்பால் இவை தெற்கிற்கும் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்ததோடு கைத்தொழில்களும் சேர்ந்ததான யாழ்ப்பாணப் பொருளாதாரம் இலங்கையின் GDP யில் ஒரு பிரதான பங்களிப்பைக் கொண்டிருந்தது. எனினும் சீமெந்து, மின்தறி ஆலைகள், எரிசோடா (Caustic soda) இகண்ணாடி, அலுமினிய, ஐஸ் உட்பட ஏனைய சிறிய நடுத்தர கைத்தொழில்களும் போரால் அழிந்து போயின ( Kandiah Kularatnam, 2001).

வெளிநாட்டில் வசிப்பவர்களின் தாய் நாட்டிற்கான மிகப்பெரும் பங்களிப்பு பண அனுப்புதல்களே என்ற வகையில் பண அனுப்புதல்கள் வடக்கு சமூகம் நிலைத்திருப்பதற்கு முக்கியமானதொன்றாகியது (Cheran,2010). வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்பப்பட்டிருக்காவிட்டால் தமிழர்களில் பெரும்பான்மையினர் வறுமைக்குள் தள்ளப்பட்டிருப்பர். இந்தவகையில் பல தசாப்தங்களாக வெளிநாட்டுப் பணம் யாழ்ப்பாணத்தவர்களின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிப்பதை அவதானிக்க முடிகிறது. இன்று யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டதாகச் சொல்லப் படும் போதிலும் பொதுவாக யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களிடத்தே தாங்களும் வெளிநாடு போயிருந்திருக்க வேண்டும் என்ற எண்ணமும் தாம் வெளிநாடுகளுக்கு போய்விட வேண்டும் என்ற விருப்பமும் மேலோங்கியுள்ளதால் பலரும் பல்வேறு காரணங்களால் தற்போதும்

வெளிநாடு செல்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்கு வெளிநாட்டிலுள்ள குடும்ப உறுப்பினர் மேலும் ஒரு உறுப்பினரை வரவழைத்துக் கொள்ளும் பொறுப்பை எடுத்துக் கொள்ளும் சங்கிலி முறை இயக்கமும் காரணமாகிறது.

இங்கே குறிப்பிடப்பட வேண்டிய விடயம் தமிழர்களின் பெருந்தொகையினர் நாட்டில் யுத்தம் தொடங்கியிருக்காவிட்டால் நிச்சயமாக வெளியேறியிருக்கமாட்டார்கள் என்பதாகும். யுத்தகால பொருளாதாரச் சீரழிவில் யாழ்ப்பாணம் ஓரளவில் தப்பித்ததற்கு பெரும் காரணம் உள்ளூரிலேயே சுழன்ற பொருளாதாரம், சேமிப்பு, சேமித்ததில் செலவு செய்ய வேண்டும் என்ற மனப்பாங்கு மற்றும் பண அனுப்புதல்களுமே. தற்போது அனைத்து வர்க்கத்திடமும் சேமிப்பதில் உள்ள ஆர்வம் குறைய ஆரம்பித்துள்ளது. நாளைய வருமானத்தை இன்றைக்கே செலவு செய்யும் ஆடம்பர வாழ்க்கைக்குள் சென்று கொண்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டுப்பண அனுப்புதல்களால் வடபகுதி மக்களிடம் பணப் புழக்கம் அதிகரித்துள்ளது. எனினும் இவ்வருமானம் பெறும் அனைவரும் பொருளாதாரம் அடிப்படையில் ஏற்றம் கண்டுள்ளது எனக் கூறிவிட முடியாது. வெளிநாட்டில் எப்படி அதிகம் சம்பாதிப்பது என்பதில் அதிக கவனம் எடுத்துக் கொள்ளும் உழைப்பாளர்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வருமானம் பெறும் அல்லது அதிகம் எதிர்பார்க்கும் பயனாளிகள் இவ்வருமானத்தை பயன்தரக்கூடிய வழிகளில் செலவீடு செய்வதில் அக்கறை கொள்வதில்லை.

ஒருகாலத்தில்கடினஉழைப்பாளிகளாகவும், கல்வியில் உயர்நிலையிலும் இருந்த யாழ்ப்பாண மக்கள் இன்று வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் அனுப்பும் பணத்தைப் பெற்று ஆடம்பர வாழ்க்கை வாழ்வதில் நாட்டம் கொண்டுள்ளனர். மக்களிடையே எதிர்பார்ப்பும் தங்கியிருக்கின்ற நிலைமையும் அதிகம் வளர்ந்திருக்கின்றது. மிகவும் ஆடம்பரமானவை எனப்பட்ட பலவிடயங்கள் இன்று மிகவும் அத்தியாவசியம் என்பதாக மாறியுள்ளதை கிராமம், நகரம் இரண்டிலும் காணலாம். இதனால் இங்கு வெளிநாட்டுப் பணத்தைக் கொண்ட முதலீடுகளைவிட நுகர்வுக் கலாச்சாரமே அதிகரித்துள்ளதுடன் பலரின் உழைப்பின் அவசியத்தையும் இது இல்லாததாக்கிவிட்டது. மில்லியன் கணக்கான பணம் செலவிடப்படுகின்றது. இதனால் ஏனைய பிரதேசங்களின் வர்த்தக விரிவாக்கத்தினை தாங்கிப் பிடிக்கும் நுகர்வுச் சந்தையாக வடக்கு மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

காலனியாதிக்கத்தில் இலங்கையின் சொத்து பிற நாடுகளுக்குச் சென்றதுபோல் தற்போது யாழ்மாவட்டத்தின் வருமானம் பிறநாட்டு மற்றும் ஏனைய மாகாணப் பொருட்கள், சேவைகளை அதிகம் நுகர்வதால் வெளிநோக்கிச் செல்கிறது. வங்கிகளின் தலைமையலுவலகங்கள் மற்றும் பங்குதாரர்கள் மேல்மாகாணத்தினரே. இந்தவகையில் வங்கி வருமானம், இலாபம், முதல் பெருக்கம் மற்றும் முதலீடு என அனைத்தும் மேல்நோக்கிச் செல்கிறது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் கிளையை நிறுவியிருக்கும் வெளிநாட்டு வங்கியொன்று வைப்பாக ஒரு பில்லியன் ரூபாவைத் திரட்டியிருந்தபோதும் ஒரு கடனைக்கூட வடக்கிற்கு வழங்காது, அதற்குப் பதிலாக, கட்டாயப்படுத்தல் காரணமாக அப்பணத்தை கொழும்பிற்கு மாற்றம் செய்தது இவ்வங்கி CEOக்கு ஒரு குற்ற உணர்வைக் கொடுத்திருந்தது (Dheerasinghe, 2014).

பிற நாடுகளில் தேய்ந்துவரும் பொருளாதார நிலையும், உள்நாட்டு அரசியல் பொருளாதாரச் சிக்கல்கள், வெளிநாட்டில் குடும்பமாக நிரந்தரமாகக் குடியேறல், பணம் அனுப்புபவர்களின் இரண்டாவது மூன்றாவது சந்ததிகளின் மனப்பாங்கு

அதாவது வதியும் நாட்டு அரசியல்-பொருளாதார-கலாச்சாரத்தில் இரண்டறக் கலந்து தேசியமாகிவிடல், காலப்போக்கில் நிரந்தர வெளிநாடுவாழ் - யாழ்ப்பாண உறவுத் தொடர்புகள் மெதுவாக, முற்றாக அற்றுப் போவதற்கான வாய்ப்புகள் காரணமாக பண அனுப்புதல்கள் குறைவடையும் சாத்தியங்கள் உள்ளன.

பண அனுப்புதல் குடும்ப மற்றும் சமூகத்திற்கான கடமை எனப் பார்க்கப் பட்டாலும் இது முதலீட்டிலிருந்தான வருவாய் என்றும் பார்க்கப்பட்டிருக்க வேண்டும்/ பார்க்கப் படலாம். பல குடும்பங்கள் தம் சேமிப்பு, சொத்துக்களை வைத்து அல்லது கடன்பட்டே ஒருவரை வெளிநாட்டிற்கு அனுப்பியுள்ளன. எனவே இது ஒரு முதலீடு. இவ்முதலீட்டை திரும்பப் பெற முடியாத நிலையில் முதலீட்டு வலுமானத்தை தக்கவழியில் செலவிட வேண்டும். அகதிகளாக உலகெங்கும் பரவி வாழ்ந்த யூதர்கள் பொருளாதாரத் துறை மூலம் வசித்த நாடுகளில் தங்கள் இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டதோடு தாய் நாட்டுக்கான பங்களிப்பையும் திட்டமிட்ட செயற்பாடுகள்மூலம்தவறாது செய்ததால்தான் இன்று உலகப் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு வளர்ந்திருக்கிறார்கள்.

எனவே தற்போதைய யுத்தமற்ற சூழலில் வடக்கைப் பொறுத்தவரை பிரதானமாகத் தெரியும் அரசியலுக்கு அப்பால், கிடைக்கப் பெறும் வெளிநாட்டு நிதி மூலங்கள், இவ்வாறான நிதி மூலங்களை இப்பிர தேசத்தின் பொருளாதார நன்மை கருதி பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் அவ்வாறாயின் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதனை ஆய்விற்குட்படுத்துவது அவசியமாவதால் இவ்ஆய்வு இதனை நிறுவ முற்படுகின்றது.

**8. தொகுப்புரை**

நிதிநிலையில் இலங்கை வெளிநாட்டில் தங்கியிருப்பதுபோல் யாழ்ப்பாணம் வெளிநாட்டுப்பண அனுப்புதல்களில் தங்கியுள்ளது. யாழ்ப்பாணப் பொருளாதாரத்திற்கு வெளிநாட்டுப் பண அனுப்புதல்கள் தேவை. இவை இங்குள்ள மக்களின் அபிவிருத்தி அதாவது புனர்வாழ்வு புனரமைப்புக்கும் விவசாயம், கடற்தொழில், கைத்தொழில், சேவைத்துறைகள், கல்வி வேலைவாய்ப்பு உருவாக்கம், சுகாதாரம் போன்ற துறைகளை மேம்படுத்துவதற்கும் ஒருங்கிணைந்து செயற் படுவது அவசியமாகும். யாழ்ப்பாண மக்கள் மற்றும் இவர்களின் வெளிநாடுவாழ் உறவுகள் தமது முன்னுரிமைப் பட்டியலை ஆராய்ந்து பூரணமாக மாற்றியமைக்க வேண்டும். மனிதவளம் சிறப்பாக உள்ள மாவட்டத்தில் பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதாரப் பங்களிப்பு பின்னிலையில் இருப்பது முரண்பாடான நிலையாகும். இலங்கைப் பொருளாதாரத்தை சீர்செய்யவும் வடபுலத்தை மீளக் கட்டியெழுப்பவும் வெளிநாட்டு நேரடி முதலீடு அதிகரிக்கப்படுவதுதான் மாற்றுவழி என அரசும் கணிப்பிடுகிறது.

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டுப் பணத்தைக் கொண்ட முதலீடுகளைவிட நுகர்வுக் கலாச்சாரமே அதிகரித்துள்ளதுடன் பலரின் உழைப்பின் அவசியத்தையும் இது இல்லாததாக்கி விட்டது. இப்போது அனேகமானவர்கள் கூலி வேலைக்குச் செல்வதற்கு தயாராக இல்லை. வெளிநாட்டுப் பணம் உள்ளூர் தொழிலை நம்பியிருக்க வேண்டிய அவசியத்தைக் குறைக்கிறது. அதேநேரம் வசதியான இருப்பிடம் முக்கியமாகின்றது. தேவைக்கு அதிகமாக அல்லது என்ன தேவைக்கு என்று தெரிந்து கொள்ளாமலும் பணம் அனுப்பப்படுவதால் வாழ்வாதாரத்திற்கு மேலாகக் கிடைக்கும் வெளிநாட்டு வருமானத்தில் பெரும் பகுதி விலையுயர்ந்த ஆடைகள், தங்க நகைகள்,

வீடுகட்டுதல் அல்லது திருத்துதல் அல்லது தேவையற்ற விஸ்தரிப்புக்கள் மற்றும் அலங்காரங்கள், ஆடம்பர களியாட்ட வீட்டுநிகழ்வுகள், கோவில் திருவிழாக்கள், கோவில் புனருத்தாரனம், மோட்டார் சைக்கிள்கள், தேவையற்ற இலத்திரனியல் பொருட்களின் கொள்வனவு, இணைய மற்றும் கைத்தொலைபேசிகள் பாவனை என அளவுக்கு மீறிய ஆசை, வருவாய்க்கு மீறிய செலவு என்பதாக நியாயமற்ற ஆடம்பர வாழ்வில் செலவு செய்யப்படுகின்றது.

தற்போது நடுத்தர வர்க்கத்திடமும் சேமிப்பதில் இருக்கும் முனைப்பு குறைய ஆரம்பித்துள்ளது. நாளைய வருமானத்தை இன்றைக்கே செலவு செய்யும் ஆடம்பர வாழ்க்கைக்குள் வாழ்வதாகத் தெரிகிறது. கடந்த கால பொருளாதாரச் சீரழிவில் இருந்து யாழ்ப்பாண மக்கள் தப்பித்ததற்கு பெரும் காரணம், உள்நாட்டிலேயே சுழன்ற பொருளாதாரமும்,சேமித்ததில் செலவு செய்ய வேண்டும் என்ற மனப்பாங்கும். இங்கு மூலதனத் திரட்டலை உந்திவிடக்கூடிய செயற்பாடுகள் மூலம் சேர்க்கப்பட்டிருக்கக்கூடிய அளவிற்கு வெளிநாட்டுப் பணவருகை இருந்தும், பெரும் பகுதி நுகர்வுக்குப் போக மிகுதி பாரம்பரிய பாதுகாப்பான முதலீட்டுத் திட்டங்களான நிலையான வைப்பு, காணி, வீடு, தங்க முதலீடுகள் என பணம் முடக்கப்பட்டதே தவிர வேறு முதலீட்டுத் திட்டங்களில் ஈடுபாடு குறைவானதாகவே உள்ளது. குடா நாட்டில் துரிதகதியில் கடைவிரித்திருக்கும் நிதி நிறுவனங்களின் குறியும் இங்கு குவிந்திருக்கும் மக்களது பணத்திலும் தங்க நகைகளிடத்திலும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது.

வெளிநாட்டில் எவ்வாறு அதிகம் சம்பாதிப்பது என்பதிலும் வெளிநாட்டிலிருந்து அதிக வருமானம் பெறுவதிலும் அதிக கவனம் கொள்பவர்கள் தம் வருமானத்தை எவ்வாறு பன்மடங்காக்குவது அல்லது வாழ்வாதாரத்தை வளமாக்கும்வகையில் செலவீடு செய்வதில் அதிக அக்கறை கொள்வதில்லை அல்லது சரியான அறிவும் திறமையும் கொண்டு செயற்படாது வங்கிகளில் நிலையான சேமிப்பு வைப்புகளில் இட்டு தம் உழைப்பை வங்கி மூலம் தமக்குத் தெரியாத பலருக்கு கடன் கொடுத்து அவர்கள் முதலீட்டு நடவடிக்கைகளை ஊக்குவித்து பலரை பணக்காரர்களாக்குகிறார்களேயொழிய தாம் பன்மடங்கு இலாபம்தரக்கூடிய வழிகளில்முதலீடு செய்யும் வழிகளை ஆராய்வதில்லை. இலங்கைப் பொருளாதாரத்தை சீர்செய்யவும் வடபுலத்தை மீளக் கட்டியெழுப்பவும் நேரடி முதலீடு அதிகரிக்கப்படுவதுதான் மாற்றுவழி என அரசும் கணிப்பிடுகிறது.

எனவே போருக்குப் பின்னரான வடபகுதிக்கான பொருளாதார மீள்கட்டுமானம், முதலீடு, வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி போன்றவற்றிற்கு வெளிநாட்டுப் பண அனுப்புதல்கள் போதியளவு பங்களிப்புச் செய்யவில்லை. யாழ்ப்பாண மாவட்டம் கொண்டுள்ள சிறந்த கல்வித்திறன் கொண்ட மக்கள், இப்பிரதேசம் கொண்டுள்ள பொருளாதார வளங்கள் மற்றும் வெளிநாட்டு நிதிவளம் என்பவற்றை திட்டமிட்டமுறையில் முறையாகப் பயன்படுத்தினால் விவசாயமும் கைத்தொழிலும் பெருமளவு அபிவிருத்தியடையும் என்பதோடு அதற்குரிய வாய்ப்புக்களும் உள்ளன. மக்கள் தம் பிரதேச அபிவிருத்தியில் ஆர்வம் கொண்டு உழைப்பார்களேயானால் இப்பிரதேசத்தை மிக விரைவாக சுயநிறைவுப் பொருளாதார வளம் கொண்ட பகுதியாக மாற்றிட முடியும். இதற்கு வெளிநாட்டுவாழ் தமிழர்கள் மற்றும் இங்கிருந்து சிபாரிசு மற்றும் ஆலோசனைகளை வழங்குவோர் தம் முன்னுரிமைப் பட்டியலை ஆராய்ந்து பூரணமாக மாற்றியமைக்க வேண்டும். எனது பாடசாலை, எமது கோவில், எனது கிராமம் எனும் குறுகிய வட்டத்தில் ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கும் உதவிகளை வரையறுத்துக் கொள்ளாது ஒருங்கிணைந்த வேலைத் திட்டங்களை உருவாக்கிச் செயற்பட வேண்டும்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வடபகுதி ஏற்படுத்தியிருந்த பயம் காரணமாக பொதுமுயற்சியில் அக்கறையின்மை, சமூகத்தில் விருப்பமின்மை, சுயமுயற்சியின்மை போன்ற விடயங்களிலிருந்து மக்கள் வெளிவர வேண்டும். இவற்றிற்கு வெளிநாட்டுவாழ் தமிழர்கள் தாம் வசிக்கும் நாடுகளின் வாழ்வியல் அனுபவங்கள்இ புதிய சிந்தனை முறைகள், தொழில் அனுபவங்கள், புகுத்தப்படக்கூடிய நல்ல செயற்திறன் கொண்ட வழிவகைகள் என்பவற்றை இங்குள்ளவர்களுக்கு மாற்றீடு செய்தல் மற்றும் அறிமுகப்படுத்தல் மூலம் போர்க்கால இடைவெளி மற்றும் பாதிப்பைக் குறைத்து ஒரு பாய்ச்சலை ஏற்படுத்த முடியும். யாழ்ப்பாணம் எதிர்கொண்டுள்ள பிரச்சனைகள் தீர்க்கக் கூடியவை. ஆனால் அதற்கான முயற்சிகள் அரசால் எடுக்கப்படுகிறதா என்பதுதான் இப்போதைய பிரச்சனை. உழைப்பினால் மனிதர்கள் உயர்வர் இந்நாடும் உயரமுடியும் என்று காட்டிய உன்னத நகரம் டோக்கியோ. யாழ்ப்பாணத்தின் எதிர்காலம் யாழ்ப்பாணத்தவர்களின் கைகளில்தான் உள்ளது.


1. **உசாத்துணை நூல்கள்**
2. Asia Foundation.,(2011) National Values survey Sri Lanka, 2011, Colombo.
3. Ashok, Mehta., (2000) Sri Lanka ethnic conflict, how eelam war won, centre for land warfare studies, New Delhi, ndia.
4. Ahilan Kadirkamar., (2010) Classes, states and politics of Tamil Diaspora, Economic and political weekly, vol 45 issue No 31 July, 2010.
5. Ahilan Kadirkamar., (2010) Role of Diaspora in homeland conflicts, conflict resolution post- war reconstruction: the case of Tamil Diaspora and Sri Lanka,
6. Cheran R.,( 2003), Diaspora circulation and transnationalism as agents for change in the post conflict zones of Sri Lanka*, p.8
7. Central Bank of Sri Lanka., (2013) Annual report 2013.
8. Dheerasinghe K.G.D.D., (2014), Sunday leader, 22.08.2014.
9. Fuglerut,O., (1999), Life on the outside, The Tamil Diaspora and Long -Distance Nationalism, London Pluto Press.
10. Luxshi ,Vimalarajah., and R. Cheran., (2010) Empowering Diasporas The Dynamics of Post-war Transnational Tamil Politics, Berghof Occasional Paper No. 31, Berghof Conflict Research Altensteinstraße 48a D–14195 Berlin, Germany.
11. Kandiah, Kularatnam., (2001) Where hope fights to live, Sundaytimes, 22.July, 2001
12. Karunaratne, W.M.,(2011) Daily news, 22/01/2001. Central Bank Assistant Governor. Sri Lanka
13. Mason, R., Hyman, I., Berman, H., Guruge, S., Kanagarathnam, P., and Manuel ,. L (2008)" Violence is international Language " Tamil women's perception of intimate partner violence, violence against women, Vol 14, 1397-1412.
14. Michal, Calavan., (2011) A brief report on the business environment of Bandarawela town, political -economy profiles, Asian foundation, Colombo.

15. Ralph, Chami., Connel Fullenkamp and Samir Jahah., (2011) Are immigrant remittance flows a source for development, working paper, No Wp/03/189, IMF
16. Santhirasegaram, S., (2012) A study on financial capacity of rural Jaffna from dowry system for economic development, Jaffna University International Research Conference, July 20-21, 2012, Proceedings of abstract, p.248, Sri Lanka
17. Santhirasegaram, S., (2013) Dowry and Women's Empowerment in Rural Jaffna of Sri Lanka, 3rd International Conference on Education and Information Management (ICEIM): Potential for Business Innovation, held at Hotel Grand Continental, Langkawi, Malaysia on 15-16 June 2013, pp.219-224,
18. Tharmalingam, S., (2011) Homeland Orientation of war -torn diasporas: Remittance and cultural practices of Tamils and Somalis in Norway, Series of dissertations, submitted to the faculty of social sciences, University of Oslo No 277.
19. கார்த்திகேசு, சிவத்தம்பி., (1995) யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு - ஓர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம்., சுதந்திர இலக்கிய விழா அமைப்பு குழு, கொழும்பு
20. விசாகசுந்தரம், நித்தியானந்தன்., (2003) இலங்கையின் பொருளாதார வரலாறு, வடக்கு கிழக்கு பரிமாணம், உயர் கல்வி சேவை நிலையம், யாழ்ப்பாணம்.
21. UNHR (2001) Global Report 2001